RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1710

OPEN ACCESS

# இனக்குழு சமுதாயத்தில் இருந்த பாதீடு எனும் பங்கீட்டுப் பண்பு

**கு. சக்திலீலா** [அ, *]

[அ] தமிழ் ஆர்வலர், இராஜபாளையம், விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா

# "Patheetu", the Distributive Character of Ethnic Societies

**K. Sakthileela** [a, *]

[a] Indpentent Researcher, Rajapalayam, Virudhunagar, Tamil Nadu, India

* Corresponding Author: sakthileelak@gmail.com

Received: 28-03-2022
Revised: 12-10-2022
Accepted: 27-10-2022
Published: 17-12-2022

Check for updates

**ABSTRACT**

The people who lived in the five types of land divisions found in ancient Tamil Nadu had a wide variety of customs and cultures. The primordial man who lived in harmony with nature suffered many losses due to the nature that surrounded him. He began to live as a group to protect himself from the loss he had suffered. This collective way of life is called ethnic life. In all the five kinds of lands in ancient Tamil Nadu, the people lived this collective life, the ethnic life. The people who lived in all five types of lands had cultures according to the richness of the land in which they lived. Food was the basic necessity of the people who lived as an ethnic group. The distribution of food and food-based products was the primary activity. They divided food and food-related products. It is examined in the three spheres of the distribution of cattle lifted from enemies, the distribution of hunted material, and the distribution of gifts, and it expressed the quality of 'eating in the public' in the ethnic community.

**Keywords:** Ethnic Societies, Customs and Cultures, Gifts.

## முன்னுரை

இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த ஆதிமனிதன் தன்னைச் சூழ்ந்திருந்த இயற்கையால் பல இழப்புகளுக்கு ஆளானான். தான் அடைந்த இழப்பிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளக் குழுவாக வாழத் தொடங்கினான். இந்த கூட்டுவாழ்க்கை முறையையே இனக்குழு வாழ்க்கை என்கின்றனர். பழந்தமிழகத்தில் இருந்த ஐவகைநிலங்களிலும் மக்கள் இக்கூட்டுவாழ்க்கையான இனக்குழு வாழ்க்கையை வாழ்ந்தனர். ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த இனக்குழு மக்கள் தாங்கள் வாழும் நிலத்தின் வளத்திற்கேற்ப பண்பாடுகளைக் கொண்டிருந்தனர். இனக்குழுவாக வாழ்ந்த மக்களின் அடிப்படைத் தேவையாக இருந்தது உணவு. உணவு மற்றும் உணவு சார்ந்த உற்பத்திப் பொருளைப் பங்கிடுதல் முதன்மையான செயலாக இருந்தது. இந்த பங்கிடுதல் முறையை, 1. ஆநிரையைப் பங்கிடுதல், 2. வேட்டைப் பொருளைப் பங்கிடுதல், 3. பரிசுப்பொருளைப் பங்கிடுதல் எனும் மூன்று தளங்களில் ஆராய்ந்தால் பிறரோடு பகிர்ந்து வாழும் உயர்ந்த பொதுவுடைமைச் சிந்தனைக்கு வேராக இருந்த தொல் தமிழரின் இனக்குழு வாழ்க்கைப் புலனாகிறது.

## பாதீடு - பங்கீடு

உலகில் கிடைத்தற்கரிய பொருளைத் தாம் பெற்றாலும் அதைத் தனக்கென எண்ணாது பிறருக்குப் பகிர்ந்து கொடுக்கும் செயல் சிறப்புடையதாக இனக்குழு சமுதாயத்தில் கருதப்பட்டது.

“தரநிலைச் சமுதாய அமைப்பில் அனைவரும் சமதகுதியைப் பெற இயலாதநிலையில் தலைவனே (Chief) உயர்ந்த தகுதியைப் பெற்றிருப்பான், அவனே மக்கள் அனைவரையும் வழி நடத்தும் பொறுப்பைப் பெற்றவனாவான். பெரும்பாலான சமுதாயங்களில் குழுத்தலைவனே உணவுப் பொருட்களைப் பகிர்ந்து கொடுக்கும் உரிமையைக் கொண்டிருந்தான்” என்பர் (Bhakthavatsala Bharathi, 2009).

“பகுத்தூண் தொகுத்த ஆண்மை

பிறர்க்கு என வாழ்திநீ ஆகன்மாறே”

என பகுத்தளிக்கும் செயலைச் செய்த கழங்காய்க்கண்ணியின் தலைமைப்பண்பு புகழப்படுகிறது (Alis, 2007). மேலும்,

“இந்திரன்

அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதுஎனத்

தமியர் உண்டலும் இலரே”

என்ற கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின் பாடல் பகிர்ந்துண்பவர்கள் இருப்பதால் தான் உலகம் நிலைத்திருப்பதைக் குறிப்பிடுகிறது (Balasubramanian, 2004).

## ஆநிரையைப் பங்கிடுதல்

இனக்குழு வாழ்க்கையில் முதன்மைச் செல்வங்களாக விளங்குபவை கால்நடைகளே ஆகும். அத்தகு கால்நடைகளைக் கவர்ந்து வருதலை வீரச்செயலாக கருதினர். ஆநிரைகளைக் கவர்ந்து வந்து தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வதைத் தொல்காப்பியம் ‘பாதீடு’ என்று வெட்சித்திணைக்குரிய துறையாகக் குறிப்பிடுகிறது. அதன்பொருள் ‘பங்கிட்டுக் கொள்ளுதல்’ என்பதாகும். அதாவது புறத்திணையியலில் இதைத் தொல்காப்பியம் ஒரு போர்முறையாகக் குறிப்பிடுகிறது. இனக்குழு வாழ்க்கையைப் பதிவு செய்த சங்க இலக்கியங்களும் ‘பாதீடு’ பற்றி குறிப்பிடுகிறது. உண்டாட்டுத் துறையில் அமைந்த,

“புல்லார் இனநிரை செல்புறம் நோக்கி

கையின் சுட்டிப் பையென எண்ணிச்

சிலையின் மாற்றி யோனே அவைதாம்

மிகப்பல ஆயினும் என்னாம்? அனைத்தும்”

என்ற பாடல் பகைவரின் மிகுதியான பசுக்கூட்டத்தைக் கவர்ந்து வந்த வீரன் அவற்றைக் காலைப்பொழுது வருவதற்குள்ளே அனைவருக்கும் பகிர்ந்தளித்தமையைக் காட்டுகிறது (Balasubramanian, 2004). இரவில் பகைவரின் காட்டரண்களை அழித்து ஆநிரையைக் கைப்பற்றிய வீரர்கள், அதைப் பகிரும் செயலை உவமையாக (பாலைநிலக் காட்சியை வருணிக்கும்) அகப்பாடலில் மாமூலனார் பயன்படுத்தியுள்ளமை பாதீடு பழக்கத்தின் பழமையைத் தெளிவுபடுத்துகிறது (Jeyabal, 2004).

## வேட்டைப் பொருளைப் பங்கிடுதல்

சங்க இலக்கியத்தில் வேட்டையில் கிடைத்த உணவைச் சமைத்தும் சமைக்காமலும் பங்கிட்டு வாழ்ந்த இனக்குழு சமூகத்தைக் காணமுடிகிறது. வேட்டுவன் கொண்டு வந்த முள்ளம்பன்றியின் ஊனை, கிழங்கொடு தம் ஊர் மக்களுக்கு கொடிச்சி பகிர்ந்தளித்தாள் (Balasubramanian, 2007). கானவன் தினைப்புனத்தைக் கவர வந்த ஆண்பன்றியை வேட்டையாடிக் கொணர அதை, அவன் மனைவி குடியினருக்கு பகிர்ந்தளித்தமையைக் கபிலர் நற்றிணையில் பாடியுள்ளார்.

“கானவன்

வல்வின் தந்த வெண்கோட்டு ஏற்றை

புனையிருங் கதுப்பின் மனையோள் கெண்டி

குடிமுறை பகுக்கும் நெடுமலைநாட"

புறநானூற்றில் உறையூர் முதுகண்ணன் கூத்தனார் சீறூர் தலைவனைப் புகழும் போது அவன் ஊர் மக்கள் வேட்டையில் கிடைத்த பன்றியின் ஊனையும் உடும்பின் ஊனையும் படலைச் சிறுமுற்றத்திலே தமக்குள் பங்கு வைத்து உண்பதற்காக நெருப்பிலே வாட்டியதைக் குறிப்பிடுகிறார் (Jeyabal, 2004). வினைமுற்றி மீளும் அகநானூற்றுத் தலைவன், தலைவி இருக்கும் ஊரைப் பற்றிக் கூறும் போது அங்குள்ள மறவர்களுக்கு இருந்த கூடி உண்ணும் பழக்கத்தைச் சொல்கிறான்.

"புன்புலம் தழீஇய பொறைமுதல் சிறுகுடி

தினைக்கள் உண்ட தெறிகோல் மறவர்

விசைத்த வில்லர் வேட்டம் போகி

முல்லைப் படப்பைப் புல்வாய் கொண்டும்"

நிலத்தில் (வேட்டையில்) கிடைத்த பொருளை மட்டும் அல்ல கடலில் கிடைத்த உணவுப்பொருளையும் இனக்குழு மக்கள் பகிர்ந்து கொண்டனர் (Jeyabal, 2004). நெய்தல் நிலத்தின் மீன்வேட்டையில் கிடைத்த அயிலைமீனை சிறுகுடிப்பாக்கத்துத் துறைவன் பகுத்தமையை அகநானூறு (70:1-4) காட்டுகிறது. வேட்டையில் கிடைத்த மீனை மட்டுமின்றி கரையில் ஒதுங்கிக் கிடக்கும் சுறாமீனையும் (தொண்டிபட்டினத்தில் வாழும்) பரதவர்கள் பாக்கத்தில் உள்ள பலருக்கும் பகிர்ந்தமையை அம்மூவனார் பாடியுள்ளார்.

"பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர்

மோட்டுமணல் அடைகரைக் கோட்டுமீன் கெண்டி

மணம் கமழ் பாக்கத்துப் பகுக்கும்

வளம்கெழு தொண்டி"

பரதவர் மீன்வேட்டையில் பெற்ற மீனை கடற்கரைச் சோலையில் குவித்து தேன் மணம் வீசும் தெளிந்த கள்ளைத் தம் சுற்றத்துடன் உண்பர் என்பதன் வழி மீன்பிடிக்கச் செல்லும் அனைவரும் கிடைத்த மீனைக் கூடிப் பகிர்ந்து கொள்ளும் நிலை இருந்தமை வெளிப்படுகிறது (Jeyabal, 2004).

"விரிதிரைக்

கண்திரள் முத்தம் கொண்டு ஞாங்கர்த்

தேன்இமிர் அகன்கரைப் பகுக்கும்

கானல்அம் பெருந்துறைப் பரதவன் எமக்கே"

என்ற பாடலடிகள் நெய்தல் நிலத்தலைவன் தனக்குக் கிடைத்த முத்துக்களைப் பகிர்ந்தளித்தமையைக் காட்டுகின்றன (Jeyabal, 2004).

## பரிசுப் பொருளைப் பங்கிடுதல்

இனக்குழு வாழ்க்கை மாறி நிலவுடைமைச் சமுதாயம் உருவாகத் தொடங்கிய காலகட்டத்தில் சிற்றூர்களில் வாழும் இனக்குழு தலைவன் மன்னனுக்கு உறுதுணையாகப் போரில் ஈடுபட்டனர். அதன் பொருட்டு மன்னன் அவர்களுக்கும் பரிசில்களை வழங்குவான். அவ்வாறு தாங்கள் பெற்ற பரிசில்களை, 'பரிசிலர்க்கு' அதாவது பரிசில் பெறாத தம் இன மக்களுக்கும் பாணர் முதலான இரவலர்க்கும் வழங்கியமையை சீறூர் மன்னன் குறித்த புறநானூற்றுப் பாடல்களால் (333:19, 334, 320, 319, 331) அறியலாம். தான் பெற்ற பரிசிலை தனக்கெனக் கொள்ளாது பிறருக்குக் கொடுக்கும் இப்பண்பு

இனக்குழு வாழ்க்கையில், பொதுவில் வைத்து உண்ணும் பழக்கத்தின் தொடர்ச்சி எனலாம். இதற்கு மலையமான்குடியை புகழும் கோவூர்கிழாரின்,

“இவரே புலன் உழுது உண்மார் புன்கண் அஞ்சி

தமதுபகுத்து உண்ணும் தன்நிழல் வாழ்நர்”

என்ற பாடலடிகள் சான்றாகின்றன (Balasubramanian, 2004). இதில் குறிப்பிடப்பெறும் ‘தமது பகுத்துண்ணும்’ என்ற சொற்றொடர் மலையமான்குடி, இனக்குழு வாழ்க்கை வாழ்ந்த பழம்பெரும்குடி என்பதை வெளிப்படுகிறது. இதன்வழி இனக்குழு வாழ்க்கையின் எச்சமாக தான் பெற்ற பரிசிலை பகிர்ந்தளிக்கும் வழக்கம் இருந்தமை தெளிவாகிறது. குமணனிடம் தன் வறுமையைப் போக்க பரிசில் பெற்று வந்த பெருஞ்சித்திரனார் தம் மனைவியிடம்,

“நின்நயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்

இன்னோர்க்கு என்னாது நீயும்

எல்லோர்க்கும் கொடுமதி - மனைகிழவோயே”

என உதவிபெற வந்தோர் தகுதியை ஆராயாது அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும்படி கூறுகிறார் (Balasubramanian, 2004). வறுமையில் வாடும் புலவர்கள் கூட பொருளை பாதுகாக்க எண்ணாது பகுத்துண்டு வாழ்ந்தமை புலனாகிறது. இப்பாடலில் “கடுப்பின் கடும்பசிதீர யாழநின், நெடுங்குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும்” என்னும் அடிகள், பிறர் பசியை உணர்ந்து தன்னிடம் இருந்த பொருளை அவர்கள் கேட்பதற்கு முன்பாகவே குறிப்பறிந்து வழங்கிய மேன்மையான பண்பை வெளிப்பிடுகிறது.

## முடிவுரை

உணவுப்பொருளைப் பங்கிடும் செயலை, பெண் பெற்றிருந்தமையை வேட்டைச்சமூகத்தில் காணமுடிகிறது. இது, தாய்வழிச் சமூகத்தின் ஆதிகுடியாக வேட்டைச்சமூகம் இருந்தமையின் வெளிப்பாடு எனலாம். மானிடவியல் ஆய்வாளர் கூறுவதைப் போல பங்கீடு செய்தலை இனக்குழு தலைவன் பெற்றிருந்தமையை, நெய்தல் நிலத்தலைவன் மீனையும் முத்ததையும் பகிர்ந்தளித்தமையின் வழி அறியலாம். அரசனாக இருந்தாலும் மக்களாக இருந்தாலும் வாழ்க்கையின் அடிப்படைத் தேவை உண்பதும் (உணவு), உடுப்பதும் (உடை) என்பதை உணர்ந்தவர்களாக சங்ககால இனக்குழு மக்கள் இருந்தனர். “செல்வத்துப்பயனே ஈதல்” எனத் தான் பெற்ற செல்வத்தைப் பகிர்ந்தளிப்பவர்களாக சீறூர் தலைவன் போன்ற இனக்குழு தலைவர்கள் இருந்தனர். இனக்குழு சமுதாயத்தில் ‘பொதுவில் வைத்து உண்ணுதல்’ எனும் பண்பே முதன்மையாகக் கருதப்பட்டது. அங்ஙனம் பொதுவில் வைப்பவையாக உணவு மட்டுமின்றி தனிப்பட்ட முறையில் ஒருவர் பெறும் ஆநிரை, செல்வம் முதலான பொருள்களும் இருந்தமையை அறியமுடிகிறது.

## References

Alis, A. (2007) Pathitrupathu, New Century Book House, Chennai, India.

Balasubramanian, K.V. (2007) Natrinai (Moolamum Uraiyum), New Century Book House, Chennai, India.

Balasubramanian, K.S.V. (2004) Purananooru, New Century Book House, Chennai, India

Bhakthavatsala Bharathi, S. (2011) Panpaattu Manudaviyal, Meiyappan Pathipagam, Chennai, India.

Jeyabal, R. (2004) Agananooru, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License